அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் பாண்டி மக்களுக்கு இன்றைக்கு ஒரு மகா புருஷராக இருக்கின்ற, எங்களுடைய வாழும் மனித தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களின் இந்த அறிவிப்பானது, தென் பாண்டி மக்களுடைய இதயத்தில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுக்குத் தெரிவித்து, உங்களின் சார்பாக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்றைக்கும் தென் பாண்டி மக்கள் நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள், அவர்கள் அம்மாவிற்குப் பின்னால் அணிவகுத்திருப்பார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

26—

பேருந்து வசதி

***5473—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, மயிலாடும்பாறை-மல்லபுரம் சாலையில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆண்டிப்பட்டி தொகுதி, மயிலாடும்பாறை-மல்லபுரம் வரையில் உள்ள 16.5 கி.மீ. சாலையில் தாழையூத்து முதல் எம்.புதூர் வரையிலுள்ள 6 கி.மீ. பகுதி வனத் துறையின்

கட்டுப்பாட்டிலுள்ள மலைச் சாலையாகும். சாலையின் இருபுறங்களும் அரிக்கப்பட்டுள்ளன. தற்போதைய நிலையில், இந்தச் சாலையின் வழியாகப் பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளதால், மாற்றுப் பாதையாக தற்போது மல்லபுரம் பகுதி மக்கள் பயன்பெறும் வகையில், உசிலம்பட்டியிலிருந்து மல்லபுரத்திற்கு 4 தனி நடைகள் செல்லும் நகரப் பேருந்தும், மல்லபுரம் பிரிவு நிறுத்தம் வரையில் 36 தனி நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்படி சாலை, மேம்பாடு செய்யப்பட்ட பின்பு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நல்லாட்சி புரிந்து வருகின்ற இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு 2001 முதல் 2006 வரை முதல்வராக இருந்த காரணத்தால், அந்தப் பகுதி மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, வனத் துறையின் அனுமதி பெற்று, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த வழித்தடத்தில் பேருந்தை இயக்கினார்கள். அதற்குப் பின்பு ஆட்சி மாறியபோது, மைனாரிட்டி தி.மு.க. அரசு, அந்த வழித்தடத்தில் பேருந்து விடுவதை 5 ஆண்டுக் காலம் நிறுத்தி விட்டது. இப்போது வனத் துறை அனுமதி கொடுத்தும் பேருந்து விடப்படுவது நிறுத்தப்பட்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், பெரிய பேருந்தை விடாமல், சிறிய பேருந்தையாவது அந்த வழித்தடத்தில் விட்டால், ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதி, உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதி, திருமங்கலம் சட்டமன்றத் தொகுதி, விருதுநகர் சட்டமன்றத் தொகுதி ஆகிய 4 சட்டமன்றத் தொகுதி மக்களும் பயனடைவார்கள். அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்குவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்படி சாலையை, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும், நெடுஞ்சாலைத் துறை அலுவலர் மற்றும் போக்குவரத்துக் கழகத்தினுடைய கோட்ட மேலாளர் ஆகியோரும் கூட்டாகக் கடந்த 25-10-2012 அன்று நேரடியாகச் சென்று, ஆய்வுகளை செய்து அந்தப் பணிகளை மேற்கொண்டிருக்கின்றார்கள். அந்தச் சாலை வழியாக பெரிய பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலை. இருபுறமும் சாலைகள் அரிக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையால் அந்தப் பேருந்துகளை தற்போது இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பகுதியிலே சிறிய பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கோரியிருக்கிறார். நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று விரைவில் அந்தப் பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

27—

மீன்பிடி துறைமுகம்

***7712—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவர் பகுதியில் சிறு மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, தலைஞாயிறு ஒன்றியம், வெள்ளப்பள்ளம் மீனவர் கிராமத்தில் 362 மீனவர்